பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 10 2024 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமரின் கதிசக்தி மின்னணு கட்டமைப்பு நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் மேற்கொள்ளப்படும் உள்கட்டமைப்புப்பணிகளை ஒருங்கிணைக்கும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. நவராத்திரி விழாவின் நிறைவு நாளான இன்று புதுதில்லியில் நடைபெற்ற ராம் லீலா நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

3. ஹரியானாவில் பிஜேபி அரசு வரும் 17-ஆம் தேதி பதவியேற்கும் என்று முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷில் அனைத்து சிறுபான்மையினரின் பாதுகாப்பை அந்நாட்டு அரசு உறுதி செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

5. பங்களாதேஷுக்கு எதிரான 3-வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<>>>>>**

பிரதமரின் கதி சக்தி திட்டத்தின்கீழ், உள்கட்டமைப்பு மற்றும் நவீன போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான 208 பெரிய திட்டங்கள், 15 லட்சத்து 39 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் செய்திக்குறிப்பில், ரயில்வேத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மூன்று பொருளாதார நெடும்பாதை திட்டத்தின்கீழ், 434 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி, சிமெண்ட் உற்பத்தி போன்ற பல்வேறு திட்டங்கள் இதில் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் கதிசக்தி திட்டத்தில் 44 அமைச்சகங்கள் மூலம் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இத்திட்டங்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் தகவல்களை பெறுவதற்கு தனியான மின்னணு கட்டமைப்பு மாவட்ட மற்றும் மாநில அளவிலும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் மத்திய கட்டமைப்போடு இணைக்கப்பட்டு, திட்டப்பணிகள் தொய்வின்றி நடப்பதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 8 ஆயிரத்து 891 கிலோமீட்டர் தூர தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், ரயில்வேத்துறை மூலம் 27 ஆயிரம் கிலோமீட்டர் இருப்புப்பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், நாட்டின் ஒட்டுமொத்த உள்கட்டமைப்புத் திட்டங்களையும் ஒன்றிணைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின்னணு கட்டமைப்புத்திட்டம் ஆக்கப்பூர்வமான பலன்களை அளிக்கும் என்று கூறினார்.

மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள், மற்றும் மாநிலங்கள் உள்கட்டமைப்புத் திட்டங்களை வெளிப்படையாகவும், திறம்படவும் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

திட்டங்களை விரைவாக நிறைவேற்றவும், சரக்கு போக்குவரத்து செலவினங்களை குறைக்கவும் சேவைகளை நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு செல்லவும் இந்த மின்னணு கட்டமைப்புத் திட்டம் உதவிகரமாக இருக்கும் என்றும் மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிரதமரின் தொழில் பழகுநர் திட்டத்தின் கீழ், பயன்பெறுவதற்கான இணையதள பதிவு இன்று தொடங்கியது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் இளைஞர்கள் **pminternship.mca.gov.in** என்ற இணையதளத்தில் இம்மாதம் 25-ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம்.

91 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில் பழகுநர் பயிற்சிக்கான வாய்ப்புகள் 193 நிறுவனங்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பல நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ், பயிற்சி அளிக்க முன்வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டில் 21 வயது முதல், 24 வயதுக்கு உட்பட்ட ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோருக்கு இத்திட்டத்தில் பயிற்சி அளிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

இந்த முன்னோடி திட்டத்தை 8 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 737 மாவட்டங்களில் முன்னோடி திட்டமாக இந்த பழகுநர் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தொழில் பழகுநர் பயிற்சிபெறுவோருக்கு மாதந்தோறும் ஐந்தாயிரம் ரூபாய் 12 மாதங்களுக்கு வழங்கப்படும்.

ஒரு முறை நிதியுதவியாக ஆறாயிரம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

எண்ணெய், எரிசக்தி, வங்கித்துறை உள்ளிட்ட 24-க்கும் மேற்பட்ட துறைகளில் பிரதமரின் தொழில் பழகுநர் பயிற்சி வழங்கப்பட உள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

புதுதில்லியில் நடைபெற்ற ராம் லீலா நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தசரா பண்டிகையையொட்டி நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தீமையை நன்மை வென்றதன் அடையாளமாக ராவணன், இந்திரஜித், கும்பகர்ணன், ஆகியோரின் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன.

<<<<<>>>>>

குஜராத் மாநிலம் மெக்சானாவில் சுவர் இடிந்து விழுந்ததில் ஆறு பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு மாநில அரசின் மேற்பார்வையில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் **Kaithal** என்ற இடத்தில் நேரிட்ட சாலை விபத்தில், 3 பெண்கள் மற்றும் 4 சிறுமிகள் உயிரிழந்த சம்பவத்திற்கும் பிரதமர் தமது இரங்கலை தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும், தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்க பிரதமர் திரு நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

**<<<<<>>>>>**

ஹரியானாவில் பிஜேபி அரசு வரும் 17-ஆம் தேதி பதவியேற்கும் என்று முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.

லவ்டாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் பிஜேபி மூத்த தலைவர்கள் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வார்கள் என்றும் கூறினார்.

அண்மையில், ஹரியானா சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், மொத்தம் உள்ள 90 இடங்களில் 48 இடங்களில் பிஜேபி பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கிறது.

**<<<<<>>>>>**

ரயிவேத்துறையில் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துவதில் மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரயில் கட்டணத்தை உயர்த்தாமல் தரமான சேவையை பயணிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

புதிய கல்விக்கொள்கை மாணவ, மாணவியரிடையே புதிய திறமைகளை மேம்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இயற்கை சூழலோடு இணைந்த பள்ளிக்கூடங்கள் காலத்தின் தேவையாக உள்ளது என்றும் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

பங்களாதேஷில் உள்ள அனைத்து சிறுபான்மையினரின் பாதுகாப்பையும் அந்நாட்டு அரசு உறுதி செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், விழாக்காலங்களில் வழிபாட்டுத் தலங்களில் கூடும் சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் டாக்காவில் தந்திபஜார் பகுதியில் சிறுபான்மையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்தும், சத்கிரா பகுதியில் உள்ள காளி கோவிலில் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது குறித்தும் இந்தியா கவலை தெரிவிப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

கோவில்களில் உள்ள விக்ரகங்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்படுவதாகவும் இந்தியா, பங்களாதேஷிடம் வருத்தம் தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

இலங்கையில் பெய்துவரும் கனமழையால் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அந்நாட்டின் பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

11 மாவட்டங்களில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா – பங்களாதேஷ் இடையேயான 3-வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஹைதராபாதில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

------------------

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை முதல் இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்று, இந்தியா கைப்பற்றியுள்ளது.

----------

மைசூரில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா – அமெரிக்காவின் ஜெஸ்சி ஆனி இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-1, 6-1 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Akanksha Dileep – Soha Sadiq** இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீவள்ளிரஷ்மிகா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-3, 6-2 என்ற செட் கணக்கில், இந்தியாவின் ரியா பாட்டியா-வை வென்றார்.

--------------

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ayhika Mukherjee – Sutirtha Mukerjee** இணை அரையிறுதிக்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

**<<<<<END>>>>>**